1990 ஏப்ரல் 19]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

10-10 மணி

7. அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 195-வது விதியின் கீழ், 1990–91 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப் பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்பு மிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

(ஆ). பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 203-வது விதியின் கீழ், 1990–91 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.